## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 796/2019 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : PW-4 | Village: |
| Name | : தனபால் | Age : |
| Father's/Husband's Name | :சீனிவாசன் | Taluk : |
| Nationality | : Indian | |
| | | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 01/06/2022**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் கௌசல்யாதேவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**:

1. நான் திருவிடைமருதூர் மனவெளி தெருவில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02/10/2017 அன்று இரவு 10.00 மணியளவில் ரவிச்சந்திரன் என்பவர் எனக்கு போன் செய்து உடல்நிலை சரியில்லை என்றும், மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார். அங்கு சென்ற பிறகு ரவிச்சந்திரன் தன்னை பக்கத்து வீட்டுக்காரர்கள் அடித்துவிட்டதாகவும், அதனால் கையை தூக்க முடியவில்லை என்றும் சொன்னார். எனவே அவரை எனது ஆட்டோவில் அழைத்து சென்று கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எங்கு, எப்போது, எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்றால் ரவிச்சந்திரன் வீட்டில் வைத்து சம்பவ தினத்தன்று இரவு விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணையில் எனது ஆட்டோவின் பதிவெண்ணை கூறினேனா என்றால் போலிசார் கேட்கவில்லை . நானும் கூறவில்லை. அடிபட்ட ரவிச்சந்திரன் எனது உறவினாரா என்றால் தூரத்து உறவினர். போலிசார் விசாரணையில் ரவிச்சந்திரன் போன் செய்து தகவல் கூறியதன் அடிப்படையில் தான் அங்கு சென்றேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அடிபட்டவர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**